# கொழுந்து

## 2015



கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா
Kollankaladdy Makkal Ontrium UK

*With Compliments*

# HARIN
## Restaurant



# WE DO CATERING

No matter what the occasion, from dinner parties, birthday parties to weddings we can provide you with exquisite Sri Lankan and Indian Food to suit your needs...

***We do live Hoppers and Dosa's in your Garden***

**Please feel free to discuss over the phone**


020 84230023 | 07572866817

18, Station Parade (Near ASDA) Northolt Road,
South Harrow,
HA2 8HB

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா

பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து
# 2015

21 - 03- 2015
சனிக்கிழமை
மாலை 6.00 மணி

**WINSTON CHURCHILL HALL, RUISLIP, MIDDLESEX, HA4 7QL**

பிரதம விருந்தினர்: வைத்தியகலாநிதி கந்தையா சிவகுமார்

கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் - UK

பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து - 2015
# நிகழ்வுகள்

மங்கள விளக்கேற்றல்

மௌன அஞ்சலி

பாடசாலைக்கீதம்:

| | |
|---|---|
| வயலின் | திரு.பாலு ரகுராமனின் மாணவர்கள் |
| நடனம் | புஷ்பாஞ்சலி செல்வி.தர்சனா சிவதம்பு |
| தலைவர் உரை | திரு.கமலக்கண்ணன் சிற்றம்பலம் |
| வயலின் | திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவர் லக்சன் சக்திரூபன் |
| நாடகம் | 'திருப்பம்' - திரு.மனோகரன் மாஸ்டர், மற்றும் பலர் |
| நடனம் | செல்விகள், சிவானுஜா கிருபாகரன், அக்சயா கிருபாகரன், ஆரபிராஜ்மோகன், ரசிகா இலங்கேஸ்வரன் |
| நடனம் | திருமதி.கெங்கா சுதாகரன் ஆசிரியையின் மாணவிகள் சிந்து சர்வானந்தம், கீர்த்தனா நித்தியானந்தராஜா |

## இடைவேளை

பிரதம விருந்தினர் உரை

ராகாஸ் இசைக்குழுவினரின் இசை விருந்து

நன்றியுரை செயலாளர்

# ஒன்றியத் தலைவரின் செய்தி

மாவை - கொல்லங்கலட்டி என்ற எமது ஊருடன் தொடர்பு கொண்ட அனைவரையும் கொழுந்து - 2015 சிறப்பு மலரின் மூலம் தொடர்பு கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது ஊர் — கொல்லங்கலட்டி — காங்கேசன்துறைத் தொகுதியில் தெல்லிப்பழை என்ற கிராமத்தின் முக்கியமான ஊராகும். விவசாய மண் நிறைந்த நமது ஊர் பல்வேறு பொருள்களின் விளைநிலமானாலும் வெற்றிலைகக்கு பெயர் பெற்றது. எனவேதான் இந்த மலரின் பெயரை கொழுந்து என வைத்ததுடன் எமது கலை நிகழ்ச்சியையும் கலைக்கொழுந்து என அழைக்கின்றோம்.

எமது ஊர் பல்வேறு சரித்திரபூர்வமான அல்லது முக்கியமானவைகளின் நடுவே உள்ளது. எமது ஊரின் எல்லைகளில் சீமெந்துத் தொழிற்சாலை, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மகாஜனக் கல்லூரி, கீரிமலை சிவன் கோவில் என புகழுக்கும் பெருமைக்கும் உள்ள நிறுவனங்கள் சூழ்ந்துள்ளன. இவற்றின் நடுவில் விவசாயக் கிராமமாக அமைதியுடனும் செழிப்புடனும் சுறுசுறுப்பாக விழங்கிய எமது ஊர் கடந்த இருபது ஆண்டுகளாக எமது நாட்டில் நிலவிய போர்ச்சூழலும் அதன் விளைவான அனர்த்தங்களும் எமது மண்ணை மக்களற்ற சூனியப் பிரதேசமாக்கி விட்டது. இன்று மக்கள் மீண்டும் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் நிலைமை சீராகவில்லை. எமது ஊரில் காலம்காலமாக வசித்துவந்த மக்களில் கணிசமானோர் புலம்பெயர்ந்து பிரித்தானியா, ஐரோப்பா கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என உலகின் செல்வந்த நாடுகளுக்குக் குடியேறி விட்டார்கள். இன்னும் சிலர் இந்தியாவில் குடியேறிவிட்டனர். இவர்களில் அனேகமானோர் மீண்டும் நாடு திரும்பப் போவதில்லை. இலங்கையினுள்ளேயே புலம்பெயர்ந்தவர்கள் இன்னமும் பலர். இவர்களும் தாங்கள் குடியேறிய பகுதிகளிலேயே வீடுகள் கட்டி பலகாலமாக அங்கேயே வாழ்ந்து வருகின்றார்கள். எனவே எமது ஊர் மீண்டும் நாங்கள் வாழ்ந்த, பல சந்தோசங்களை அனுபவித்த ஊராக மாறுமோ தெரிய வில்லை.

உங்களின் உதவியுடன் எமது ஒன்றியத்தின் முன்னெடுப்பால் எமது பாடசாலை இயங்கத் தொடங்கியுள்ளது. பிள்ளையார் கோவில் நல்லமுறையில், பூசை, ஆராதனைகளுடன் செயல்படும் நல்ல செய்தி எம்மை உற்சாகப்படுத்துகிறது.

செல்வந்த நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களில் பிரித்தானியாவிற்குக் குடியேறியவர்கள் முக்கியமானவர்கள். கணிசமானவர்கள். எனவே நாம் வாழ்ந்த எமது மண்ணை மீண்டும் வளமாக்கும் திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். இதன்மூலம் எமது மீண்டும் பழைய கொல்லங்கலட்டியாக வேண்டும் இவைதான் நாம் இந்த ஒன்றியத்தை உருவாக்கக் காரணமானவை. எமது திட்ங்களுக்கும் நடவடிக்கைகளுக்கம் உங்கள் எல்லோரினது உதவியும் முக்கியமானவை.

எனவே ஆதரியுங்கள். இணைந்து வெற்றி பெறுவோம்.

நன்றியுடன்
கமலக்கண்ணன்
தலைவர்



# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய சைவ வித்தியாசாலை
வாழிய இதன் புகழ் நாளும்
தாயெனத் தொளுவோம் தரு பயன் பெறுவோம்
நேயமாய் என்றும் நினைவினில் வைப்போம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

தொல்புகழ் அமைந்த கொல்லங்கலட்டி
எனும் இடம் உள்ளன வாழி
சைவமாம் அமிழ்தும் தமிழ் மொழி தேனும்
சாரும் விஞ்ஞானமும் வளர்ப்பாய்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

வேலுப்பிள்ளை நூலறி புலவர்
நிறுவிய புகழ் மறவோம்
சிற்றம்பலமாம் சீர்பணி புரிந்தார்
முகாமையாளர் அவர் பெயர் நினைவோம்
விநாயகர் அருளால் விளங்கிடும் தாயை
விருப்புடன் நாள்தோறும் பணிவோம்
வாழிய வாழிய சைவ வித்தியாசாலை

பாடியவர்: புலவர் ம பார்பதிநாதசிவம்

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

கொல்லங்கலட்டி, கொழுந்து என்ற சொற்களைக் கேட்டவுடன் என் மனத்தில் இளமைக்கால நினைவுகள் பல எழுகின்றன. கண்டியிலும் கொழும்பிலுமே கல்விகற்றாலும் மாவைத் தேர்த்திருவிழாவையும் பல விடுதலை நாட்களை கொல்லங்கலட்டியில் ஒன்றுவிட்ட அண்ணன்மாரோடு ஒன்றுபட்டுக் களித்த அனுபவங்கள் பசுமையாக நிலைத்து நிற்கின்றன.

கிளானையில் சாணை சின்னத்தம்பி வீட்டில் மூன்று மகன்மார். மூத்தவர் சங்கரப்பிள்ளை. அவர் விவசாயத்தில் விற்பன்னர். சிறந்த வெற்றிலைத் தோட்டங்களை உருவாக்கிப் பெயர்பெற்றவர். அடுத்து கந்தையா எனது தந்தையார். இளையவர் சரவணமுத்து, கால்நடை வைத்திய நிபுணர். எனது தந்தையார் மண் இரசாயன வல்லுநர். 'கெமிஸ்ட் கந்தையா ' எனப் பலர் அழைத்தாலும் தான் "கொல்லங்கலட்டி கந்தையா" என்று மிகப் பெருமையுடன் சொல்லிக்கொள்வார். வேலை நிமித்தமாக கண்டியிலும் பின்பு அம்பாறையிலும் அதன் பின்பு கொழும்பிலும் வாழ்ந்த அவரின் தோற்றமும், திருமண நிகழ்வும், இறுதி யாத்திரையும் கொல்லங்கலட்டியில்தான். பாவலர் துரையப்பாபிள்ளை மிஷன்பாடசாலையிலிருந்து வெளியேறி மகாஜனாக் கல்லூரியை ஸ்தாபித்தார்.

அவருடன் முதன் முதலில் சேர்ந்த ஏழு மாணவரில் எனது தந்தையாரும் ஒருவர். கொல்லங்கலட்டி ஒரு புண்ணிய பூமி. தன்னகத்தே சிறப்பு மிக்க வீரகத்திப் பிள்ளயார் ஆலயத்தையும் ஒரு புறத்தில் நகுலேஸ்வரத்தையும் மறு புறத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலையும் கொண்டது. இவை அற்புதங்கள் நடந்த, வரலாற்றுப் பெருமை மிக்க ஷேத்திரங்கள். இவற்றைவிட எத்தனையோஅருள்நிறை ஆலயங்கள் பிரதேசத்திற்குப் பெருமைசேர்க்கின்றன. இவற்றுள் குறிப்பாக என் மனத்தில் கிளானை வைரவர் இடம்பெறுகின்றார்.

வரண்ட மண்ணில் மழைத்துளி விழும்போது எழுகின்ற வாசனையை மண்வாசனை என்று சொல்வார்கள்.அந்த அனுபவம் மனத்தில் ஆழப்பதிந்துவிடும். அதோடு கிராமிய அனுபவங்களையும் சேர்த்துச்சொல்வார்கள். சூத்திரக் கிணற்றடிக்கு அண்ணன்மாரோடு சென்று வாடிய வெற்றிலைக் கொடிகளுக்கு நீர் பாய்ச்சிவிட்டு சேற்றில் விளையாடிய அனுபவத்தை நினைவுகூரும்போது அதை 'மண்வாசனை' என்று சொல்லலாமா ? நீங்களே முடிவுசெய்யுங்கள்.

சமய உணர்வில் மட்டுமல்ல சீரான கல்வியிலும் கவனம் செலுத்தியது எங்கள் கிராமம். 1869ம் ஆண்டு அமரர் திரு ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியாசாலையும் 1910ம் ஆண்டு தொடங்கிய மகாஜனாக் கல்லூரியும் இதற்கு மகத்தான சான்று. அதுமட்டுமல்ல பல அரசியல் பிரமுகர்களையும் ஈந்தது எமது மண். இவர்களுள் என் கண் முன் நிற்பவர் அமரர் திரு சங்கரப்பிள்ளை சிவதாசன் அவர்கள். எனது ஒன்றுவிட்ட அண்ணர்.

புலம் பெயர்ந்து வந்தாலும் ஈழத்திற்குச் செல்லும் போதெல்லாம் பிறந்த மண்ணைத் தரிசிக்கத் தவறுவதில்லை. ஒருமுறை ஆயுதப் படையின் ஆக்கிரமிப்பு இருந்தபோதிலும் மேலதிகாரிகளுடன் பேசி விசேட அனுமதிபெற்று பிள்ளையார் கோயிலுக்குச் சென்று அங்கு சைக்கிளில் வந்த குருக்களைக்கொண்டு அர்ச்சனையும் செய்வித்து வழிபடும் வாய்ப்பு கிடைத்தது. இவையெல்லாம் பழங்கதைகள். தற்போது மீண்டும் மக்கள் குடியேறுகின்றார்கள். அவர்களுடைய நலன் கருதி செயற்படுவது எல்லோருடைய கடமை. அந்த நல்லெண்ணத்தோடு பிரித்தானியாவில் கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டுச் செயற்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னையும் எனது பாரியாரையும் இன்று பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவித்ததற்கு மனமார்ந்த நன்றியையும் உங்களோடு ஒத்துழைக்கும் எண்ணத்தையும் தெரிரியப் படுத்துகிறேன்.

வணக்கம்.

**வைத்தியகலாநிதி கந்தையா சிவகுமார்**

## Kollankaladdy Makkal Ontrium - United Kingdom

37 Gantshill Crescent, Ilford, Essex IG2 6TS

### Patrons

Dr C Pathmanathan
Dr (Mrs) Shanthi Rajasooriyar
Mr Siva Thamboo

| | | | |
|---|---|---|---|
| President: | Mr S Kamalakannan | Vice President: | Mrs T Sooriyanarayanan |
| Secretary: | Mrs V Navaratnam | Asst. Secretary: | Mr A Murugathas |
| Treasurer: | Mrs S Dilipkumar | Asst. Treasurer: | Mr V Sokkan |
| Cultural Secretary: | Mr S Ramachandran | Sports Secretary: | Mr R harikaran |

For Contacts

Kannan
07946 303 627
s_kannan@hotmail.co.uk

Sugirtha
07875 998 087
dilipsugi@hotmail.co.uk

# வாழ்த்துச் செய்தி கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் (கனடா)

**பிள்ளையார் சுழி போட்டு தும்பிக்கையானை நம்பிக்கையோடு தொழுதால் எடுத்த காரியம் கை கூடும் என்பது எமது சமய வழக்கம். வெற்றிலைக் கொழுந்தும்,கல்வியறிவு வளமும் நிறைந்த கொல்லங்கலட்டி எனும் எம்பதியில் வினாயகப்பெருமான் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.**

**இத்தகைய சிறப்பு வாய்ந்த எம் ஊரில் வாழ் மக்கள் மதிப்போடும் புகழோடும் உலகெங்கும் பரவி நல் வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். புலம் பெயர்ந்து உலகம் முழுவதும் பரவி வாழ்ந்தாலும் எம் ஊரின் மீது வைத்துள்ள பற்றுதலாலும், மதிப்பினாலும் வெளி நாடுகளில் எமது ஊரின் பெயர்களை நினைவு கூர்ந்து கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் எனும் ஒன்றியத்தை நிறுவி எம் ஊர் மக்களை ஒன்று சேர்த்து ஒன்று கூடல்களை நடாத்தி வருவது மட்டுமல்லாது வாசிகசாலை, கோவில், பாடசாலை போன்றவற்றிற்கு பேருதவி புரிந்து கொண்டு வருகின்றனர்.**

**இவ் வகையில் இங்கிலாந்து தேசத்தில் வாழும் கொல்லங்கலட்டி ஊர் மக்கள் 2011ம் ஆண்டிலிருந்து ஒன்று கூடல்களை நடாத்தி வருவதோடு "கொழுந்து" எனும் மலரையும் வெளியிட்டு வருகின்றனர். இவரகளின் சேவையைப் பாராட்டுவதோடு மட்டுமல்லாது இவர்களை வாழ்த்தவும் வேண்டும். இது போன்றே கனடா வாழ் கொல்லங்கலட்டி மக்களும் ஒன்றுகூடல்களை நடாத்துவதோடு வாசிகசாலை, கோவில், இடம் பெயர்ந்த ஊர் மக்கள் போன்றோர்களுக்கு இயன்றளவு சேவையும் உதவியும் புரிந்து வருகின்றனர்.**

**இவர்கள் சேவை மேன்மேலும் தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல கொல்லங்கலட்டி வீரகத்தி வினாயகப்பெருமானை வேண்டி கனடாவாழ் கொல்லங்கலட்டி மக்களும் வாழ்த்துகின்றோம். வளர்க உங்கள் பணி.**

யா/கொல்லன்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை

J/KOLLANKALADDI SAIVATHTHAMIL VIDTHYASALAI

தெல்லிப்பளை TELLIPALAI

தலைவர்,
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்,
பிரித்தானியா.

Sir,

தங்களது ஒன்றியத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற நிதி உதவியால் கிணற்று மூடி (வலை), மின்சாரம், வலையுடன் கூடிய பாடசாலைப் பெயர், அதனோடு இணைந்த முன்பக்க ஒரு மதில், சிறிய ஆரம்ப மணி என்பன கிடைக்கப் பெற்றன. இதற்கு பாடசாலை சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தங்களின் உதவிகள் என்றும் தேவை என்பதை அன்புடன் தெரிவிக்கின்றேன். தேவைகளை நாடி நிற்பதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

T. Vasanthan
Principal
J/Kollankaladdy Saiva Tamil Vid.
Tellippalai

# ஊருக்கோர் பணியாளன்
## எங்கள் சிவஸ்ரீ சண்முகநாதகுருக்கள்

இலங்காபுரியின் வடபுலத்தில் அமைந்துள்ள தண்பொழில் சூழ் கொல்லங்கலட்டி எனும் கிராமத்தில் 8 ஆம் நூற்றாண்டில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி விநாயகர் பிரதிஸ்டை செய்ய விரும்பினார் என்றும் அச் சூழலில் உள்ள ஆலமரத்தடியில் விநாயகர் திருவுருவை அமைத்து பிரதிஷ்டை செய்து வைத்தார் என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். அத்திருவுருவை வீரகத்தி விநாயகராக தியான பூசை செய்து வழிபட்டு வந்த மெய்யடியார்களில்ஒருவரான அம்பலவாண தேசிகரின் பரம்பரையில் பிறந்து கொல்லங்கலட்டி வாழ் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் சிவஸ்ரீ சண்முகநாதகுருக்கள். தோளில் உத்தரியம்,நெற்றியில் என்றும் நிலையான வீபூதிக்குறிகள்,சந்தனப்பொட்டு, கருணை பொழியும் கண்கள், தீட்சண்யமான சிந்தனை காட்டும் முகம் இன்றும் மறக்க முடியாத அவர் உருவம்.

கொல்லங்கலட்டியில் எல்லோராரும் மதிக்கப்படும் சைவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்ரமணியத்திற்கும் தெய்வானைப்பிள்ளை அம்மாவிற்கும் மகனாக 01.:02.:1951 ஆம் ஆண்டு ஜனனம் ஆனவரே சிவஸ்ரீ சண்முகநாதகுருக்கள் ஆவார். இவர் தமது ஆரம்ப கல்வியை கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையிலும் உயர் கல்வியை மகாஜனாக் கல்லூ ரியிலும் கற்றுத்தேறினார்.

புராண படனம் படித்தல், வேதசிவாகமபயிற்சி, சிவபூசை நியமங்கள், மகோற்சவம் கும்பாபிசேகப்பயிற்சிகள் எல்லாவற்றையும் குருகுல முறையில் மாமனாரான பொன் அம்பலவாண தேசிகரிடம் கற்றுணர்ந்தார்.சைவ ஆகமங்களிலும் சைவ சித்தாந்த உண்மைகளிலும் கொண்ட அறிவுப்புலன் காரணமாகவும், அம்பலவாண தேசிகர் எழுதிக்கொடுத்த மரண சாதன ஆலய உரிமை காரணமாகவும் 1976 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டி விநாயகர் ஆலய பூசகராகவும், பிரிபாலன உரிமையாளராகவும் பணி புரியத் தொடங்கினார்.

வேதாமகங்களை முறைப்படி உணர்ந்து இவ்வாலயத்தில் தினமும் மூன்று காலப் பூசைகளை சிறப்புற நடாத்தினார். புண்ணிய காலத்தில் விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற ஆவன செய்தார். இவரது மாமனாரான அம்பலவாணகுருக்களின் பின்னர் இவ்வாலயத்தில் கொடியேற்ற மகோற்சவத்தை சிறப்புற செய்த பெருமை சிவஸ்ரீ சண்முகநாதகுருக்களையே சாரும்.

இவரது சிவ பக்தியின் காரணமாக விநாயகர் ஆலயத்தில் சிவன் திருவுவை பிரதிஷ்டை செய்து கிழக்குப்புறத்தில் வாயில் ஏற்படுத்தி கொடிமரத்தையும் அமைத்து சிவபக்தர்களின் வழிபாட்டிற்கு வழிசமைத்த பெருமை இவருக்குரியதாகும்.

சிவஸ்ரீ சண்முகநாதகுருக்கள் சமயக்கிரியைகளுக்கு காரணகாரியம் கூறுவதில் வல்லவராக இருந்ததுடன் சமூகத்தின் தேவைகளையும் நிறைவு செய்து வந்துள்ளார். ஜோதிடம் பார்த்தல், நாள், திதி பார்த்தல் போன்றவற்றை கணித்து கிராமமக்களின் வேண்டுதல்களை மகிழ்வுடன் பூர்த்தி செய்வார்.

தான் பிறந்து வளர்ந்த கிராமமான கொல்லங்கலட்டி மக்களின் வாழ்க்கையிலும், ஆலயத்தின் வளர்ச்சியிலும் அபரிதமான பற்று வைத்திருந்தமையால் ஆலயமும் வளர்ந்தது, மக்களின் வாழ்வும் உயர்ந்தது.

ஆயினும் 1992 ஆம் ஆண்டு வரை சிறிய பிரச்சனைகளுக்கு மட்டும் முகம் கொடுத்து வெற்றியீட்டிய போதும் ஆவணி 20ஆம் திகதி ஏற்பட்ட இடப்பெயர்வில் வலி வடக்கின் பெரும் பகுதியை விட்டு மக்கள் வெளியேறினர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொல்லங்கலட்டி கிராமம் முற்றாக தன்னையிழந்து நாட்டின் அசாதாரண நிலைமை மக்கள் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கியது. காலம் புரண்டோட வாழ்க்கைப் பயணங்களும் மாற மக்கள் வாழ்வும் திசை மாறியது.

எழில் மிகு கொல்லங்கலட்டி கிராமம் பற்றைக் காடுகளும், நெடிதுயர்ந்த இப்பிலிப்பில் மரங்களுமாக புதிய கோலத்தைப்பெற்றது. போகும் பாதைகள் முட்புதர்களுடன் சிறிய காடாக மாறியிருந்தது. 1996 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலைமாற்றத்தின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் குடாநாடு கொண்டுவரப்பட்டது. அழிந்து போன கிராமங்களும், சிதைந்து போன கட்டிடங்களுமாக குடாநாட்டின் பல பகுதிகள் மாறியிருந்தன.

இந்நிலையில் சிவஸ்ரீ சண்முகநாதகுருக்களின் தாகம் தனது விநாயகர் ஆலயத்திற்கு எப்படியும் செல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது. மக்கள் நடமாட்டமற்ற ஏகாந்தமான காங்கேசன்துறை வீதியின் பக்கமாக கண்ணுக்கெட்டிய தூரம் வரை காடாக இருந்த அரசடிப் பாதையில் சென்று ஆலயத்திற்கு பூசை செய்ய வேண்டுமென்ற அவாவினால் இராணுவத்தினரின் அனுமதியைப்பெற்று உள்ளே சென்ற குருக்கள் ஐயாவை எம்மால் மறக்க முடியாது.

மக்கள் வாழாத ஆலயச்சூழலுக்கு செல்வதற்கு துணையாக தனது மனைவி கமலாதேவியையும் துணிந்து அழைத்து சென்றார். அவருக்கிருந்த மும்மொழிப்புலமை படையினருக்கு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

இராணுவத்தினருடன் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேலாக உள்ளே சென்று அங்கே நாள் முழுவதும் தங்கியிருந்து விநாயகருக்கு பூசை செய்து மாலை இராணுவத்தினருடன் திரும்பி வந்து கொண்டிருந்தவர் படிப்படியாக மக்களையும் அழைத்து சென்று ஆலயத்தின் முக்கிய தினங்களை சிறப்பாக செய்து வந்ததுடன் கோவில் திருவிழாக்களையும் நடாத்தினார்.

ஆலயம் பல இடிபாடுகளைக் கண்டிருந்தமையால் புனருத்தாரணம் செய்யவேண்டிய கட்டாயமாகியது. குருக்கள் ஐயா அவர்கள் நிதி வசதியற்ற நிலையில் அன்பர்களிடம் நிதியைப்பெற்று சிறிது சிறிதாக கோவிலைத் திருத்தத் தொடங்கினார். ஆலயத்தின் நித்திய பூசைகளை கிராமமாக செய்ததுடன் ஆலயமும் புதிய பரிமாணத்துடன் வளர்ந்து வருவதற்கு அரும்பாடுபட்டார் என்பதை இன்றைய புனருத்தாரண சபையினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

அவரது உடல்நிலை சீராக இல்லாத போது அவருக்குத் துணையாக ஆலய கருமங்கள் அனைத்திலும் தோள் கொடுத்து நின்ற அவரது மனைவி கமலாதேவியின் சேவையை மறக்க முடியாது. கொல்லங்கலட்டி கிராமம் தனது சேவையையும் மக்களையும் இழந்து நின்ற வேளை விநாயகரின் துணையே பெரிதென நினைத்து தன்னலமற்ற தொண்டினை புரிந்த குருக்களும் அவரது துணைவியாரும் மக்களால் என்றும் நினைவு கொள்ளவேண்டியவர்கள்.

இன்று கொல்லங்கலட்டி மக்கள் தங்கள் கிராமத்தில் குடியேறி இவ்விடங்களை சீராக அமைத்து வாழத்தொடங்கியமைக்கு கோவிற்பணியே காரணமெனலாம்.தங்கள் குல தெய்வமான விநாயகர் ஆட்சி செய்யும் பிள்ளையார் கோவிலின் குருக்களவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வதற்கு புனருத்தாரண சபை அமைக்கப்பட்டு அவரது கனவை நனவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருக்கள் ஐயா 2013 இல் இறையடி சேர்ந்த பின்னர் நித்திய நைமித்திய கருமங்களை செய்வதற்காக 13∴07∴2014 இல் புனருத்தாரண சபையால் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஐயா அவர்களின் துணைவியாரிடம் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அடியார்கள் பரிந்துரைந்தமையால் இன்று தனது கணவர் விட்டுச் சென்ற பணியை அவர் பொறுப்பேற்று செய்து வருகின்றார்.

புனருத்தாரண சபையினர் கோவில் புனருத்தாரண வேலைகளை பொறுப்பேற்று உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அடியார்களின் அனுசரணையுடன் ஐயா அவர்கள் விட்டு சென்ற பணியை செவ்வனவே செய்துள்ளனர். வீரகத்தி விநாயகர் ஆலயம் சீரான கட்டிட அமைப்புடன் புதுப்பொலிவு பெற்றுள்ளது. முற்றாக நிறைவேற்ற இன்னும் சிலபணிகளைத் தொடரவேண்டியுள்ளது.

எங்கும் நிறைந்த எமது அடியார்களின் ஆதரவுடன் மீண்டும் வீரகத்தி விநாயகர் ஆலயம் எங்கள் கிராமத்தில் எழுச்சி பெறும். விநாயகரின் அருளாட்சியும் என்றும் எமது மக்களுக்கும், கிராமத்திற்கும் கிடைக்கும்.

## புனருத்தாரண சபை

**ஓம் சாந்தி**

# எமது கிராமம்

இலங்கை நாட்டின் செந்தமிழ் மாகாணமாகிய யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலுள்ள கிராமம் மாவை கொல்லங்கலட்டியாகும். இக்கிராமத்துக்கு வடக்குப்பக்கமாக மாவைக்கந்தன் ஆலயமும், மேற்குப்பக்கமாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் அமைந்துள்ளன. நடுவில் உள்ள மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை சுற்றி வர எமது கிராமம் அமைந்துள்ளது.

சோழ ராஜகுமாரியான மாருதப்புரவீகவல்லி குன்ம நோயும் குதிரை முகமும் மாற வேண்டி கீரிமலையில் நீராடி மாவிட்டபுரத்தில்கந்தசுவாமியார் திருவுருவை பிரதிஸ்டை செய்தும் பிறர் பார்வைக்கு மாறியும் தன் பார்வைக்கு மாறாதிருந்ததால் விநாயகர் பிரதிஸ்டை செய்யாத குறை என உணர்ந்து கன்னி மூலையில் ஏழு விநாயகர் திருவுருவங்களை பிரதிஸ்டை செய்வதாக சங்கர்ப்பித்து முதன் முதலாக கொல்லங்கலட்பகுதியில் ஆலமரத்தடியில் சோழ நாட்டில் இருந்து கலைத்திறன் மிக்க உருக்குப்பீடத்துடன் கூடிய திருவுவை வரவழைத்து பிரதிஸ்டை செய்தார். இத் திருவுருவம் இன்னும் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கின்றது. அத்தகைய பெருமை மிக்கது அருள்மிகு கேணிக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

அத்துடன் கிளானை வைரவர் கோவில்,சடச்சப்பை வைரவர் கோவில் என இரு வைரவர் ஆலயங்களுமுள்ளன முதலியார் மடத்தில் முன்பு வேதாரனியத்தைச் சேர்ந்த சைவக்குருக்கள்மார் வந்து தங்கியிருந்து அப்பகுதி மக்களுக்கு கல்யாணச்சடங்கு, மரணச்சடங்கு முதலியவற்றை நடாத்தி வந்தார்கள். இவர்களுள் எங்கள் எல்லோருக்கும் தெரிந்தவர் சங்கர ஐயர் ஆவார். முதலியார் மடத்துடன் சேர்ந்திருந்த மூன்று அறைகளில் ஒன்றில் வாசிகசாலை நடைபெற்று வந்தது. மற்ற இரு அறைகளிலும் கடைகள் நடாத்தப்பட்டன.இப்பொழுது பவளம் கடை ஆரம்பிக்கபட்டு நடைபெற்று வருகிறது.

எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.கு.வன்னியசிங்கம்,திரு.ச. சிவதாசன், திரு.சி.சிவமகாராசா, திரு.ந.ரவிராஜ் ஆகியோர் பாராளுமன்ற அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவை ஆற்றினார்கள். எமது கிராமத்துப்பிள்ளைகள் ஆரம்பக்கல்வியை கொல்லங்கலட்டி தமிழ் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும் மேற்கொண்டார்கள். மக்கள் இடம் பெயர்ந்து சென்ற பின் இன்னும் கொல்லங்கலட்டி தமிழ் கலவன் பாடசாலை இயங்கத் தொடங்கவில்லை.

முன்பு அருள் நெறிக்கழகம்,இளைஞர் விவசாயக் கழகம், சன சமூக நிலையம், வாசிக சாலை, இளைஞர் விளையாட்டுக்கழகம், என்பன செயற்பட்டு வந்தன. மாவை கொல்லங்கலட்டி நலன் புரி மன்றம் கொழும்பில் சிறப்பாக செயற்பட்டு வந்தது. இவைகள் ஒன்றும் இன்னும் இயங்கத்தொடங்கவில்லை. மக்கள் மீள்குடி ஏறத்தொடங்கியபின் இவைகள் செயற்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

சிந்தித்தவர் - கொல்லங்கலட்டியூர்
திரு கனேசலிங்கம். அப்பாப்பிள்ளை

# கொல்லங்கலட்டி

யாழிசைக்கும் யாழ்ப்பாணத்தின்
தெல்லிப்பளை எனும் தென்
மேற்கு திசையில் வீசும்
கொல்லங்கலட்டி மண் வாசம் அங்கே
கொளுத்து விட்டு வளரும் வெற்றிலை கொழுந்து வாசம்
கோயில் விழாக்கள் தொடங்கிவிட்டால்
கூட்டிச்செல்லும் பல ஊர் மக்களையும் அங்கே
கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
என்ற முதுமொழியை மெய்யாக்க
வேண்டுதலை நிறைவேற்ற வந்த சோழ ராஜனின் இளவரசி
மாருதபுரவீகவல்லி முதன் முதல்அமைத்த தலம்
எங்கள் கீர்த்தி பல கண்ட
மூர்த்தி கொண்ட தீர்த்த தலம்
நேர்த்தி பல நிறைவேற நிறைவாய் அமைந்த தலம்
எங்களூர் பெருமையை சொல்லிட இன்றளவும் போதாது
நன் மாணாக்கரை உருவாக்கி நல்கல்வியை பெற்றிடவே
ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்பதில்
ஊருக்குள் ஒரு கல்விக்கூடம்
சைவ வித்தியாசாலையும் குடில் அமைக்கவே அவ்வூர் சிறார்க்கு
குருவிக்கூடாய் அடைக்கலம் தரவே
கல்விச்செல்வத்தை அள்ளி வழங்க ஆண்டவனும் அனுப்பினான்
ஆறுமுகம் வேலுப்பிள்ளை உருவில்
சித்தம் கொண்டு சிட்டுக்குருவிகளாய்
சிறகடித்த மாணாக்கர் இன்று
போர்ச்சூழலால் உலகெலாம் பரந்து விரிந்து வாழ
கொல்லன்கலட்டியின் நாலா திசையும்
புகழ் பூத்த மாவைக்கந்தனும் இன்னோர்
திசையில் கீரிமுகம் நீக்கமுறப்பெற்ற
கீரிமலைச் சிவனும் வீற்றிருக்க
மறு புறத்தே சங்கொலிஎழுப்பும்
சீமெந்து தொழிற்சாலையும் அமைய

மலரைத்தேடி வரும் வண்டுகளாய் மாணவ மாணவியரும்
அணையா தீபமாம் கல்வி எனும் அறிவோளியைப்பெற்றிட
மகாஜனாக் கல்லூரிஎனும் அன்னையை
தினம் தினம் நாடி ஓடி வரவே
பெருமைக்கும் புகழுக்குமாய் பூப்பூத்த ஊர் எம் ஊர்
மண்ணுக்குள் விளைந்த வைரங்களாய்
எம் மண்ணின் மைந்தர்கள் சிறந்த கல்வியாளர்களாயும்
கண்ணியம் தவறா இன்னோரன்ன
தொழிலாளரையும் படைப்பாளரையும்
தந்த எம்மண்ணின் அன்னையின்
கருவறையில் விளைந்தவர்களும் முத்துக்களும் பவளங்களுமே
அம்பனை கிளானை பன்னாலை விராங்கொடை தொட்டு தச்சன்காடு வரை
நம்பூர் புகழ் எல்லையை எட்டிப்பிடிக்க கீரிமலை மேற்க்கில் கயிந்தப்பை
எல்லை தையிட்டிப்புலம் எட்டும் வரை காவலரனாய் வைரவர் சாமி
வீற்றிருக்க எம்பூர் மீண்டும் கொழுந்துவிட்டு துளிர் விட
ஓயாது பாடு படுவோம் நம் ஊர் காக்க புலத்தில் வாழும்
மண்ணின் மைந்தர்கள் நாம்
கொல்லங்கலட்டி வாழ் மக்கள் ஒன்றியம்
கொல்லங்கலட்டி புகழ் ஓங்குக

**கலா சிவலிங்கம்**



# Kollankaladdy Makkal Ontrium  Management Committee 2014-2015



**Front Row:** (L-R) Mrs V Navaratnam (Secretary), Mrs T Suriyanarayanan (Vice-President), Mr S Kamalakannan (President), Mrs S Dilipkumar (Tresurer)

**Back Row:** (L-R) Mr S Kirupakaran, Mr V Sokkan (Assistant Tresurer), Mr A Murugathas (Assistant Secretary), Mr P Mahendran, Mr R Harikaran

**Absent:** Mr S Ramachandran, Mr R Kopal, Mr P Sooriakumar, Mrs S Srikaneshakumar, Mr P Vairavanathan, Mr A Selvarajah, Mrs S Raveendran

# Kalaikkolunthu 2013

















# BBQ & Get Together 2014

















# Kollankaladdy Makkal Ontrium Members



# FOUNDERS DAY
# ஸ்தாபகர் தினம்

**கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையின் ஸ்தாபகர் தினம் கடந்த 20 வருடத்திற்கும் மேலாக நாட்டின் அனர்த்தம் காரணமாக நடாத்த முடியாமல் இருந்தது. இப்போது பிள்ளையார் கிருபையால் இவ்வருடம் நடைபெற இருக்கின்றது. எனவே உங்களால் பங்குபற்ற முடியுமானால் அதனை நிறைவேற்றவும்.**

**இடம் - கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை**

**காலம் - 04 சித்திரை 2015 - 9.00am**



# எழில் கொஞ்சும் கொல்லங்கலட்டி

இந்துசமுத்திரத்தின் நித்திலம் என அழைக்கப்படும் இலங்கைத் தீவில் அழகிய வளம் மிகுந்த யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கில் அமைந்த கிராமமாக கொல்லங்கலட்டி அமைந்துள்ளது. இங்கு வீரகத்தி விநாயகர் வீற்றிருந்து மக்களுக்கு அருள் பாலித்து வரும் அதேவேளை அருகில் மாவிட்டபுரம் கந்தனும் கீரிமலைச் சிவனும் தெல்லிப்பளை துர்க்கை அம்மனும் கொல்லங்கலட்டி வாழ் மக்களுக்கு இஸ்ட தெய்வங்களாக துணை நிற்கின்றன என்பதும் சிறப்பாகும்.

எமது கிராமத்தின் வெற்றிலையானது யாழ் மண்ணில் பல பிரதேகங்களில் இருந்து தேடிவந்து வாங்கும் பொருளாதார பயிராக காணப்படுகிறது. வெற்றிலைத் தோட்டம் அமைந்திருக்கும் ஒழுங்கமைப்பும் பார்ப்பவர் மனதை கவரும்.

கல்வியில் சிறந்து விளங்கும் மகாஜனக் கல்லூரியானது பல கல்விமான்களையும் பேராசிரியர்களையும் உருவாக்கி வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்பாடசாலை அயற்கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கொல்லங்கலட்டி வாழ் மக்களுக்கும் இடையே நற்புறவு தொடர்வதற்கான பாலமாக அமைகிறது. இக்கிராமமானது எப்போதுமே சுறுசுறுப்புடன் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் முதல் பாடசாலை மாணவர் வரை எமது கிராமத்தை தான்டியே தமது கிராமங்களுக்கு செல்வார்கள்.

எமது கிராமத்தின் மையத்தன்மை காரணமாக தினமும் திருவிழா கோலம் கொண்டே காணப்படும்.

பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் அழகு சேர்க்கும் அம்பனை வயல் வெளி கொல்லங்கலட்டிக்கு அழகு சேர்க்கும் மேலதிக தகமையாகும். மாரி காலத்தில் வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் வயல் வெளியும் தவளைச்சத்தமும் மிகவும் வித்தியாசமான சூழலாகும்.


எமது கிராமத்தில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் மிகவும் எளிமையானவர்களாகவும் அயற்கிராம மக்களுடன் அன்பாக பழகுபவர்களாகவும் உதவி என்று தேவைப்படும் போது தோள் கொடுப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

காலம் காலமாக ஒரே இடத்தில் தேன் கூடு போல் ஒற்றுமையாக வாழ்ந்த மக்களை யுத்தம் எனும் கொடிய அரக்கனின் தாண்டவம் 1990ல் இடம்பெயர வைத்தது. விடியல் பொழுது ஒன்றில் எங்குஇ ஏன்இ எதற்கு செல்கிறோம்? என்ற விளக்கங்களுக்கு விடையின்றி இடம்பெயர்ந்தோம். இவ்விடம் பெயர்வானது சிலரை சொந்த நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளுக்கும் இடம் நகர்த்தியது.

இதன் விளைவு பல இனிய முகங்களை இன்றுவரை பார்க்க முடியாத சூழலை ஏற்படுத்தியுள்ளது. எப்படி இருப்பினும் இன்றுவரை எம்மால் கொல்லங்கலட்டி மக்கள் என்ற உள்ளுணர்வை மறக்க முடியாதுள்ளது என்பது ஆணித்தனமானதாகும்.

**-சுகிர்தா டிலிப்குமார்**

# ஊரின் ஒளி விளக்கு



எங்கள் வீட்டிற்கு முன்புறம் உள்ளது கொல்லங்கலட்டி வீதி. எனது சிறு வயதில் இருந்து இவ் வீதியூடாக மாவைக்கந்தன் ஆலயம், கீரிமலை என அடிக்கடி அம்மாவுடன் போய் வருவேன். அந்த வீதியில் பெரிய இரும்பு படலை வீட்டைக் கடக்கும் போது அம்மா " இது விசுவநாதன் மாஸ்டர் வீடு " என்று சொல்லுவார். அந்த வீட்டுக் குமாரை சிறு பையனாகவே தெரியும். நான் லண்டன் வந்து கார்சல்ரன் (Carshalton) வாசியான பிறகுதான் குமார், கௌரி தம்பதிகளுடன் நெருக்கமான உறவு ஏற்பட்டது.

பழமையும், பசுமையும் ஒளிரும் ஊர் கொல்லங்கலட்டி. சைவமும் தமிழும் அதன் சிறப்புக்கள். எளிமை, கடும் உழைப்பு, ஒழுக்கம் ,உபசரணை என்பன இக்கிராமத்தவர்களின் இயல்பு. சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி தன் குதிரை நீங்கிய நேர்த்திக்காக கோபுர சிறப்புடன் கூடிய மாவைக்கந்தன் ஆலயத்தைக் கட்டினாள். இதனைச் சூழ அவள் கட்டிய ஏழு பிள்ளையார் ஆலயங்களில் ஒன்று கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில். இந்தவரலாறு ஊரின் பழமைச் சிறப்புக்கு எடுத்துகாட்டு.

இக் கிராமத்தின் உயர்வுக்கு உழைத்தவர்கள் வரிசையில் அமரர் விசுவநாதன் ஸ்ரீகணேசகுமார் முக்கியமானவர். இளமை வனம் இளம் வயதிலேயே காலன் அவரை அழைத்துக்கொண்டார். ஆனால் அவர் வாழ்நாளில் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. தன்னுடைய மழலைப்பராயத்திலேயே தாயார் சிவஞானவதியை இழந்தார். இவர் தந்தையார் மற்றும் மாமியார் பராமரிப்பில் வளர்ந்தவர்.

இவருடைய தொண்டு உள்ளத்தின் ஊற்று தந்தையார் வலி தொடர்ந்தது எனலாம். தந்தையார் விசுவநாதன் மலையகம்,முதலாக அயற்பாடசாலையான வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். புலமைப் பரிசில் பரீட்சையில்

அதிக மாணவர்களை தொடர்ந்து சித்தியடையச் செய்து பெருமை பெற்றவர். சைவத்தொண்டன், பிறவிச் சைவரும் கூட.

மாணவர்களுக்கு பிரத்தியேக இலவச வகுப்பெடுப்பது இவருடைய தொடர் சேவையாக இருந்தது. நல்ல பண்ணிசையாளர். மகனோடு லண்டனில் வாழ்ந்த காலத்திலும் கூட மகனைப் போலவே விம்பிள்டன் பிள்ளையார் ஆலயத்தில் நித்தமும் பண்ணிசை பாடுவார்.

குமாரின் அழகான வதனம், மாறாத புன்சிரிப்பு, அன்பான சுபாவம், உதவிக்கு முந்தும் அவர் கரங்கள், பொதுப்பணி ஆர்வம் என்பன இவரின் சிறப்புக்கள். கொல்லங்கலட்டி வீதியில் இவர் வீட்டிற்கு அண்மையாக அமைந்த பிள்ளையார் ஆலயத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். அதிகாலை எழுந்ததும் ஆலயத்தைச் சுற்றி வலம் வந்து கடமைகளைத் தொடர்வது இவர் வழக்கம். இதனால் இன்றும் இவ்வாலயக் கொடியேற்றத் திருவிழா இவர் உபாயமாகவே தொடர்கிறது. இவ்வாலயக் கட்டுமானப் பணிகளுக்கும் பெரும் பங்காற்றியவர்.

இவர். முளையிலேயே ஒழி வீசிய பயிராக அமரர் தான் பயின்ற மகாஜனாக் கல்லூ ரியில் திகழ்ந்தார். விளையாட்டுத் துறையிலும் சாதனையாளர், ஜெயரத்தினம் இல்லத்தலைவர், மாணவர் தலைவர் என்ற பதவிகள் இவரது பள்ளிச் சிறப்புகள். பின்னர் பட்டயக் கணக்காளர் படிப்பைத் தொடர்ந்தார். 1983 இனக் கலவரத்தில் தமிழர்கள் தங்கள் பிரதேசத்திற்கு பாதுகாப்பாக இடம் பெயர உழைத்தார்.1983 இறுதிப் பகுதியில் லண்டனுக்கு இடம் பெயர்ந்தார். தாயகத்தில் இடையில் தடைப்பட்ட பட்டயக் கணக்காளர் படிப்பை லண்டனில் பூர்த்தி செய்தார்.கணக்காளராக லண்டனில் தொழிலைத் தொடர்ந்தார். வர்த்தகத் துறையில் காலூன்றிய இவர் அதில் துரிதமாக வளர்ந்து தொழில் அதிபராகத் திகழ்ந்தார். இவருடைய முயற்சிகளுக்கு துணைவியும், மைத்துனியுமான கௌரி என அழைக்கப்படும் ஸ்ரீகௌரிதேவியும் பெரும் பங்களித்தார்.

இவர்களது இல்லறப் பேறுகளாக மகன் அஜந், மகள் தாக்சாயினி ஆகியோர் பிறந்தனர். தற்போது பல்கலைக் கழக மாணவர்களாக உள்ள இவர்களும் தந்தை வழியில் ஒளிர்கிறார்கள்.


நண்பர்களால் சொக்கன் என அழைக்கப்பட்ட அமரர் குமார் லண்டனிலும் பொதுப் பணிகளில் ஈடுபட்டார். கோவில் திருப்பணிகள் ஆற்றினார். அரசியலில் தொழிற் கட்சியின் பிரதேச அமைப்பாளராக நியமனம் பெற்றார். உள்ளூராட்சித் தேர்தலில்

வேட்பாளராகவும்போட்டியிட்டார்.லண்டனில் தமிழரின் குரலாக வெளிவந்த ஐ.டீ.ஊ வானொலிச் சேவையின் பங்காளராக ஆரம்பத்திலேயே இணைந்தார். அதன் வளர்ச்சிக்கும் தொடர்ந்து பங்காற்றினார்.சுனாமிப் பேரழிவு தாயகத்தில் ஏற்பட்ட போது லண்டனில் இருந்து சென்று நிவாரணப்பணிகளுக்கு உதவினார்.

ஊரில் தான் கற்ற மகாஜனக் கல்லூரியின் புனரமைப்புக்கும், மற்றும் உள்ளூர் ஆலயங்களான மாவைக்கந்தன்,கீரிமலை நகுலேஸ்வரர்,தனதூர் பிள்ளையார் என்பனவற்றிற்கும் தொடர்ந்து உதவிகள் வழங்கி வந்தார்.ஊரில் உள்ள தனது உறவுகளுக்கும் உதவுவதை வழக்கமாக கொண்டிருந்தார். தன குடும்பத்தவர்களை அழைத்து லண்டனில் நிலைபெறச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு.

லண்டன் வந்த பல நண்பர்களுக்கும், உறவுகளுக்கும் இருப்பிட, தொழில் வசதிகள் பெறவும் உதவினார்.“வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த குமார் “ தன் 44வது வயதில் தான் நேசித்த தன தாய் மண்ணில் அகால மரணமானார்.அவர் மறைந்து பத்து ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. ஊரின் ஒழி விளக்காக திகழ்ந்த அவர் இன்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்துள்ளார்.

## ப வை ஜெயபாலன்



# A TRIBUTE TO A SINCERE LAWYER,

## HUMAN RIGHTS ACTIVIST, MAN OF PRINCIPLES AND

# A PERSON WITH NOBLE QUALITIES



I write with deepest sorrow and a feeling of helplessness on the demise of a great man of our time.
Born as a grandson and a son to honourable,religious and down to earth teachers at Kollankaladdy Tellippalai and educated at the school of a liberal minded revolutionist, the Late poet Mr. T. A. Thuraiappapillai's Mahajana College; late Mr. V. S. Ganesalingam has taken a permanent place in the hearts and minds of thousands of people who have known him because of his personality and the way he lived his life.

He spoke what he thought. He thought what was good for others. He was a down to earth man. He was humble to the humbled and arrogant to the arrogant.

Late Mr. Ganesalingam who was by nature a man of fights for the rights was never satisfied with the clerical job he was doing in the government clerical service and therefore left that position and became a lawyer in the early seventies. Even whilst working as a lawyer, he was not satisfied with dealing with ordinary legal issues when thousands of Tamils were detained and tortured in the detention centres and army camps throughout Sri Lanka. Therefore he went to Colombo and became a Human rights Lawyer and started to fight for the human rights of thousands of innocent Tamils.

He took up the challenging position of Directorship in "Home for Human Rights" (HHR) an NGO in 1.991 and worked until 2011. During the course of his career as a Human Rights lawyer he risked his life and was prepared to sacrifice the same for a good cause.

As a Human Rights lawyer he visited many army camps and detention centres throughout Sri Lanka and interviewed victims of torture and prepared reports on human rights violations and submitted the same to UN bodies including Amnesty International. He also brought many actions in Sri Lankan courts against the unlawful detention of innocent Tamils.

During the course of his human rights activities he travelled to many countries, submitted reports on human rights violation by the Sri Lankan government and attended human rights briefings. He produced reports in Geneva and Strasbourg. He attended the Amnesty International briefing in London on many occasions.

1996 July, he attended the 27th Study Sessions of the International Institute of Human Rights, Strasbourg, France and then to the UK visiting various human rights organizations and activists

that included Amnesty International, Minority Rights Group and British Refugee Council.
1997 November, he made a short intervention at the 17th Sessions of the United Nations Committee on Economic, Social and Cultural Rights NGO hearing at the "Palais des nations", Geneva as the representative of the Home for Human Rights and FIAN International.
1997 November, he was a participant at the Experts Committee on the draft Convention on enforced disappearances held in Geneva, co-organised by FEDEFAM, Amnesty International Commission of Jurists and International Service for Human rights.

1998 April, he made an oral presentation and formally presented a Parallel Report to UN Committee on Economic, Social and Cultural Rights to Sri Lanka's first Report to the Committee, on behalf of HAN.

On some occasions the human rights sessions in London lasted into late evenings and therefore he either missed the last train or ended up at a wrong destination in the late winternights often ending up being rescued by me. Due to his frail health condition and old age, I advised him to finish and make his way home early, he stayed long hours thus risking his safety and would say that when thousands of young Tamil girls and boys were risking their lives in detention centres he should not worry about his own.

Mr.Ganesalingam made complaints and submitted reports to the UN against the unlawful occupation by the Sri Lankan armed forces in the so called high security zone. He also brought fundamental rights action against the unlawful occupation.

Late Mr. Ganesalingam never thought he was going to die in Australia. He intended to go back to Sri Lanka and continue to fight for the rights of the Tamils until his demise. However on 15th November he learnt about the hunger strike and struggle by the people of Valigamam North against the unlawful occupation by the armed forces in the so called high security zone. He has also seen the plight of the protesting innocent Tamils whose loved ones were missing,were brutally attacked by the armed forces who prevented them from meeting the foreign journalists and dignitaries including British Prime Minister David Cameron. Therefore he lost hope and felt utter helplessness which caused his heart to fail.

I am fortunate to have had association with such a high esteemed noble person both in Sri Lanka and in the UK as a junior lawyer, fellow Mahajanan and a friend.

The last mail that I have received from this noble man was a message of a wish. By responding to a mail I sent to him on 24/10/2013 regarding a Charity I am involved in Vavuniya, Sri Lanka, he wished me by saying "You have taken up a very worthy course and you will have the blessing of the God"

My thoughts and sympathies are with his family in Australia. May I pray to God for his soul to rest in peace.

Om Shanthi Shanthi Shanthi
Subramaniam Srikanthalingam (Wembley, UK--04/12/2013)

# தொண்டுகளால் புகழ்பெற்ற எம் ஊரவர்

## மகாஜனாவின் மைந்தன் - திரு வைத்தீஸ்வரன் தயாளன்

இந்த மண்ணில் வாழ்கின்ற எம்மூரவர்களில குறிப்பிடத்தக்க ஒருவர் திரு வைத்தீஸ்வரன் தயாளன் ஆவார். அமரர் 'மகாஜனச் சிற்பி' ஜயரத்தினம் அவர்களுக்கு தோள்கொடுத்து ஆரம்பகால மகாஜனாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டவர் தயாளனின் பேரனான, காலம் சென்ற திரு தம்பு வாத்தியாராகும். தம்பு வாத்தியார் மகாஜனாவில் நீண்ட காலம் ஆசிரியராகவும் கனிஷ்ட பாடசாலை அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் ஓய்வு பெற்ற அன்று கல்லூரியில் இடம்பெற்ற பிரிவுபசார நிகழ்வின் பின்பாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து மேள வாத்தியங்களுடன் அவரின் வீடுவரை கொண்டு சென்ற நிகழ்வு கல்விச் சமூகத்தில் மிக அபூர்வமானது. தம்பு வாத்தியார் அவர்கள் தெல்லிப்பளை கிராமசபை உறுப்பினராகவும் தெல்லிப்பளை தென்மேற்கு விவசாயிகள், தொழிலாளர்களுக்கான கடனுதவிச் சங்கத் தலைவராகவும் இறக்கும்வரை கடமையாற்றினார். தயாளனின் தந்தையார், அமரர் வைத்தீஸ்வரன் அவர்கள் காந்தீயத்தில் அபார நம்பிக்கை கொண்டவர். தமிழரசுக் கட்சி ஆரம்பத்தபோது அதன் முக்கிய செயற்பாட்டாளராக விளங்கியவர்.

தனது ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை தமிழப் பாடசாலையில் பெற்றவர், தனது மூத்த சகோதரர்களான ரஞ்சன், குணாளன் ஆகியோரைப் பின்பற்றி சிறு வயதிலேயே மகாஜனக்கல்லூரியில் சேர்ந்து உயர்தர வகுப்புக் கல்விவரை தொடர்ந்தார். உயர்கல்வி பெறுவதற்காக இங்கிலாந்துக்கு வந்து பொறியிலாளராகி சென்ற ஆண்டுவரை கடமையாற்றி ஓய்வு பெற்றார். இங்கிலாந்தில் தான் வதியும் நியூமோல்டன் பகுதியில் நண்பர்களுடன் இணைந்து 28 ஆண்டுகளிற்கு முன்பாக தமிழ்ப்பாடசாலை ஒன்றினை உருவாக்கினார். இந்த மண்ணில் தமிழ்க் கல்வியை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை நிர்வாகத்தில் ஆரம்ப காலம்முதல் இன்றுவரை தலைவர், செயலாளர் உட்பட் பல்வேறு பதவிகளில் செயற்பட்டு வருகின்றார். 1987இல் தனது கல்லூரியான மகாஜனக் கல்லூரிக்கு, ஒரு பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டபோது அதன் நிர்வாகத்தில் இணைந்து இன்றுவரை முதன்மை உறுப்பினர்களில் ஒருவராகச் செயற்பட்டு வருகின்றார். நான்கு ஆண்டுகள் சங்கத்தின் செயலாளராகவும் ஆறு ஆண்டுகள் அதன் தலைவராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். தற்போது பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவராகச் செயற்பட்டுவரும் தயாளனின் மூத்த சகோதரர் திரு ரஞ:சன் அவர்களும் கனடாவில் இயங்கும் மகாஜய பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றினார்.

இந்த மண்ணில் கடந்த 23 ஆண்டுகளாக நல்ல முறையில் செயற்பட்டுவரும் தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் (TSSA – UK) ஆரம்பகாலத்தில் அதன் செயலாளராகச் கடமையாற்றி, அந்தச் சங்கம் ஸ்திரமாகச் செயற்படுவதற்குக் காரணமானவர்களில் ஒருவர். இங்கே நடைபெறுகின்ற கலை நிகழ்வுகள், அரங்கேற்றங்கள் இவரின் பங்களிப்பில்லாமல் நடைபெற்றதில்லை எனலாம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழுக்குரிய பழைய மாணவரான திரு வைத்தீஸ்வரன் தயாளன் அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கிங்ஸ்ரன் கவுன்சில் உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார். லிபரல் ஜனநாயகக்கட்சின் உறுப்பினரான இவர் தமிழ்த தேசியத்தில் தீவிர பற்றும் அக்கறையும் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். திரு தயாளன் அவர்களின் சகோதரர்கள் தமிழரசுக் கட்சியிலும் தமிழர்விடுதலைக்கூட்டணியிலும் பொதுக்குழு உறுப்பினர்களாக விளங்கியவர்கள். உதவிகள் தேவைப்பட்ட இடங்களுக்கெல்லாம் வலியவே சென்று உதவி செய்திடும் நல்ல உள்ளம் கொண்டவர் திரு தயாளன்.


**நாகலிங்கம் சிறிகெங்காதரன்**

மகாஜன பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர்

# எமது கிராமம் - இன்றைய தோற்றம்

















# CARLTON LEISURE
Worldwide Travel & Tours

Appointed Agent for

SriLankan Emirates QATAR BRITISH AIRWAYS Specialist Partner JET AIRWAYS ETIHAD ROYAL JORDANIAN OMAN AIR KUWAIT AIRWAYS

**SPECIAL FLIGHT OFFERS TO**

**COLOMBO, CHENNAI, CANADA**

**Call us for special family discount**



இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில்
முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்

Hundreds of airlines and thousands
of destinations worldwide

www.carltonleisure.com

Book with confidence ATOL protected.

தமிழில் உரையாடி உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான
விலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**020 8554 4200**
**020 8100 0000**

OPEN 7 DAYS

IATA ATOL PROTECTED


*Best wishes*

*for*

*Kalaikkolunthu 2015*

From

Mr & Mrs Shanmuganathan

and

family

# KMO GET TOGETHER 2014



*With Compliments*

# Fairfield convenience Store

17 Maumbury Road
Dorchester, England, DTI IQN
United Kingdom

Somar & Co Ltd
Accountants and Tax Advisors

Thank you
For
Sponsoring & Supporting

**கலைக்கொழுந்து** – 2015

*Best wishes*

*for*

*Kalaikkolunthu 2015*

From

Mr & Mrs Gnanamurali

and

family

*Best wishes*

*for*

*Kalaikkolunthu 2015*

From

Mr & Mrs Pranavan
and family

SRS
Distributor

# SRS Distributors

## Distributor of Continental Confectionery







**A27 GSR Self Storage**
**Dagenham**
**Essex RM9 6PS**
**Contact Siva: 077 7283 3820 / 079 2135 0669**

இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த orderfood.lk.

விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள
இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை.
விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு




www.orderfood.lk

இலங்கையில் உறவினர்களுக்கு உணவு மற்றும் அன்பளிப்புகள் வழங்கிட

Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka
Order online at www.orderfood.lk




- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

மேலும் விரைவில் பல இடங்கள்.




Available on the App Store

ANDROID APP ON Google play

உங்கள் தேவை எங்கள் சேவை
+94 114 444 111

info@orderfood.lk
/orderfood
/orderfoodlk